අන්තරංගமானது

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**අ.පො.ස.(සා.පෙළ) විභාගය - 2016**
**க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2016**

NEW

**විෂයය අංකය** 87 **විෂයය** **தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 1 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 1 | 34. | 1 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 1 | 17. | 1 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 1 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 2 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තර පත්‍රයේ අවසාන කිරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25/40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I: 25/40

## புதிய பாடத்திட்டம்
## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

1. ருவான், மகேஷ் மற்றும் கமலா ஆகியோர் தாம் ஒன்றாக இணைந்து தயாரித்த இருபது பக்கங்கள் கொண்ட ஊடகத் திட்ட அறிக்கையை அச்சிடுவதற்காக, நகரிலுள்ள நவீன வசதிகளுடன் இயங்கும் தொடர்பாடல் நிலையத்திற்குச் செல்ல உடன்பட்டனர்.

(i) மேற்குறித்த உடன்பாடு எந்த வகைத் தொடர்பாடல் அடிப்படையில் ஏற்பட்டது ?

கூட்டுத் தொடர்பாடல் / குழுத் தொடர்பாடல் / சமூகத் தொடர்பாடல்

(ii) மேற்குறித்த திட்ட அறிக்கைக்கான தரவுகளைத் திரட்டும்போது பயன்பட்டிருக்கக்கூடிய இரண்டு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

குழுக்கலந்துரையாடல்
நேர்காணல்
அவதானிப்பு
வினாக்கொத்து
மூளைப்புயல் / சிந்தனைக் கிளறல்
ஆவணப் பரிசீலனை
பங்குபற்றல் அவதானம்

(iii) கணினி வழி அச்சிடலின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

செலவு குறைவானது,
நம்பகத்தன்மையும் அதிகம்.
துரிதமானது
கவர்ச்சியானது
கையாளல் இலகுவானது
சேமித்து வைத்தல் இலகு.
இலகுவில் செம்மையாக்கம் செய்ய முடியும்.
பல பிரதிகள் எடுக்கக் கூடியது.
புகைப்படங்கள், அட்டவணைகளை ஆவணத்தில் இணைத்துக் கொள்வது இலகு.
ஆவணங்களின் அந்தரங்கத் தன்மையை பாதுகாக்கும் வழிவகைகள் கொண்டது.

(iv) தட்டச்சு செய்து முடிந்ததும் ஆவணத்தின் மென்பிரதியொன்றை (softcopy) வெளிநாட்டில் வாழும் தனது சகோதரனுக்கு அனுப்புவதாக மகேஷ் வாக்குறுதியளித்திருந்தார். இதற்கு மிகப் பொருத்தமான வழிமுறை யாது ?

மின்னஞ்சல்

(v) அச்சிடப்பட்ட ஆவணத்தின் வன்பிரதியொன்றை (hardcopy) தனது தனிப்பட்ட தேவைக்காகப் பெற்றுக்கொள்ள ருவான் உத்தேசித்திருந்தார். இதற்கு மிகப் பொருத்தமான வழிமுறை எது ?

பிரதியை அச்சிட்டு வைத்துக் கொள்ளல். ( Printout)
நிழல் பிரதியை பெற்று வைத்துக் கொள்ளல். (Photocopy)

(vi) அச்சிடப்பட்ட அறிக்கையின் முதற்பக்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள பிளாஸ்றிக் உறையொன்றை நுழைப்பது பொருத்தமென கமலா கூறினார். இந்த வழிமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

லமினேட்டிங் முறைமை

(vii) மேற்குறித்த ஆவணத்தைப் புத்தக வடிவில் கட்டி இணைத்துக்கொள்ளப் பயன்படுத்தக்கூடிய இரண்டு புத்தகம் கட்டும் வழிமுறைகளைப் பெயரிடுக.

இலகு கோவைப்படுத்தல். - Spiral Binding
ஊசிகளால் கோவைப்படுத்தல். - Stepler Binding
வன் கோவைப்படுத்தல். - Hard Binding

(viii) யுனெஸ்கோ வரைவிலக்கணப்படி, ஒரு புத்தகம் அவசியம் கொண்டிருக்க வேண்டிய பக்கங்களின் குறைந்தளவு எண்ணிக்கை யாது ?

49 பக்கங்கள்

(ix) புத்தகங்கள், சஞ்சிகைகளைத் தவிர அச்சு ஊடகத்தின் வேறு இரண்டு வடிவங்களைப் பெயரிடுக.

பத்திரிகை
செய்திமடல்
துண்டுப்பிரசுரங்கள்
சுவரொட்டிகள்

(x) அச்சு ஊடகத்தின் பலவடிவங்களிலும் புகைப்படங்களின் பாவனை பொதுவாகக் காணக்கிடைக்கிறது. அச்சு ஊடகத்தில் பயன்படுத்தப்படும் வேறு இரண்டு காட்சி வடிவங்களைக் (visual forms) குறிப்பிடுக.

கேலிச்சித்திரங்கள் ( Cartoons)
வரைபடங்கள் ( Maps)
சித்திரங்கள் ( Arts)
கிராஃபிக்ஸ் வரையுருக்கள் ( Graphics)
வரிப்படங்கள் ( Diagrams)
வரையுருக்கள் ( Illustration) (2 x 10 = 20 புள்ளிகள்)

2. (i) "இலங்கையில் முதன்முதலாக அச்சிடப்பட்ட செய்திப் பத்திரிகை லக்மினி பஹன."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

இல்லை. (1 புள்ளி)

கொழும்பு ஜேர்னல் – இலங்கையின் முதல் வெளிவந்த செய்திப் பத்திரிகையாகும்.

(ii) "புலமைச் சொத்துச் சட்டத்தில், 'ஆக்கம்' என்பது புத்தகங்கள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்களைக் குறிக்கின்றது."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

இல்லை.
புலமைச் சொத்து என்பது இலக்கிய, கலை மற்றும் விஞ்ஞான துறைகளைச் சேர்ந்த அனைத்தும் புலமைச் சொத்துக்களாகும். இலக்கிய, கலை மற்றும் விஞ்ஞான ஆக்கங்களையும் அது குறிக்கும்.

புத்தகங்கள், பத்திரிகைகள், கணினி நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய எழுத்து ஆக்கங்கள்.

பேச்சு, போதனை, அறிவித்தல், தலைமையுரை மற்றும் ஏனைய வாய்மொழி ஆக்கங்கள் போன்றனவும் அடங்கும்.

(2 புள்ளி)

(iii) "ஒரு செய்தி முறையாகப் பெறுநருக்கு எடுத்துச் செல்லப்படாதிருக்கும்போது 'மொழிரீதியான இடையூறு' உருவாகின்றது."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான மூன்று காரணங்களைத் தருக.

இல்லை.

சொற்பொருள் அல்லது மொழிசார் குறுக்கீடுகள் என்பதால் கருதப்படுவது யாதெனில் தொடர்பாடுநரால் அனுப்பப்படுகின்ற செய்தியை கிரகித்துக் கொள்ள முடிந்த போதிலும் அதனை அதே முறையால் பொருள் விளங்கிட பெறுநருக்கு முடியாது போனமையாகும்.

1. தெளிவற்ற சிக்கல் தன்மையான வார்த்தைப் பிரயோகம்.
2. பயன்படுத்தியுள்ள சில குறியீடுகள் அல்லது சொற்கள் அல்லது ஒரே வார்த்தை பலவிதமான அர்த்தங்களைக் கொண்டிருத்தல்.
3. மொழி அல்லது மொழிநடை அல்லது மொழிப் பிரயோக முறை பெறுநருக்கு பொருத்தமற்றதாக இருத்தல்.
4. குறித்த குழுவிற்குள்ளே பயன்படுத்தப்படுகின்ற உப பண்பாட்டு வார்த்தைப் பிரயோகம்.
5. பிரதேச மொழி பாவனை (1 x 3 = 3 புள்ளிகள்)

(iv) "அச்சு ஊடகத்தில் புகைப்படங்களை இணைப்பது அனுகூலமான ஒன்று."
மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? உங்கள் விடைக்கான நான்கு காரணங்களைத் தருக.

ஆம்.

1. தகவலின் உண்மைத் தன்மையை அறியலாம்.
2. கவரும் தன்மையை ஏற்படுத்துதல்.
3. கல்வியறிவு இல்லாதவர்களும் புகைப்படங்கள் மூலம் தகவலை புரிந்து கொள்ளும் வாய்ப்பு.
4. பல்வேறு அர்த்தங்களை புகைப்படங்கள் வெளிப்படுத்தும்.
5. அர்த்தம் உடனடியாகவே வெளிப்படுத்தப்படல்.
6. எழுத்தில் வெளிப்படுத்த முடியாத உணர்ச்சி வெளிப்பாடுகளை புகைப்படங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும்.
7. நினைவூட்டும் ஆவணமாக பயன்படுத்தப்படும். (1 x 4 = 4 புள்ளிகள்)

**3.** (i) இலங்கையில் தற்போது, பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி அலை (radio wave) வகை யாது ?

பண்பலை

FM - (Frequency of Modulation ) (1 புள்ளி)

(ii) செய்திப் பத்திரிகைகள் - சஞ்சிகைகள், தொலைக்காட்சி - சினிமா ஆகிய ஊடகங்களின் பெறுநர்களை அறிமுகப்படுத்திக்கொள்ளப் பயன்படும் இரண்டு விசேட பெயர்களை முறையே எடுத்துரைக்க.

செய்திப்பத்திரிகை, சஞ்சிகைகள் } வாசகர்

தொலைக்காட்சி, சினிமா } பார்வையாளர்கள் (2 புள்ளி)

(iii) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூன்று வெவ்வேறு வகைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

1. செய்திகள்
2. அறிக்கை, விபரண நிகழ்ச்சிகள்
3. சின்னத்திரை நாடகங்கள்
4. இன, சமய நிகழ்ச்சிகள்
5. கலந்துரையாடல்கள் / விவாதங்கள்
6. மெய்மை நிகழ்ச்சிகள்
7. நேரடி ஒளிபரப்பு
8. இசை நிகழ்ச்சிகள்
9. சஞ்சிகை சார் நிகழ்ச்சிகள் (1 x 3 = 3 புள்ளிகள்)
10. கேள்வி பதில் நிகழ்ச்சிகள்

(குறித்த 3 விடயங்களை சுருக்கமாக விளக்கி எழுதியிருப்பின் மாத்திரமே முழுப் புள்ளிகள் வழங்கவும்)

(iv) ஊடக அறிக்கையிடலில் பயன்படுத்தக்கூடிய மூலாதாரங்கள் நான்கைச் சுருக்கமாக விவரிக்குக.

1. தனியார் மூலாதாரம்
2. நிறுவன மூலாதாரம்
3. ஊடக மூலாதாரம்
4. எழுத்து மற்றும் இலக்கம் சார் மூலாதாரம்

அல்லது

1. செய்தி முகவர்கள்
2. செய்திக் குறிப்பு
3. செய்தியாளர் மாநாடு
4. நேர்முக கலந்துரையாடல்
5. சம்மேளனம் / மாநாடு / செயலமர்வு
6. விரிவுரை / கூட்டம்
7. உத்தியோகப்பூர்வ அறிக்கை
8. செய்தி நாட்குறிப்பு
9. தொலைபேசி அழைப்புக்கள்
10. பீட் அறிக்கையிடல்.
11. நூலகம் மற்றும் சுவடிகள் கூடம்
12. விசாரணை அழைப்புக்கள்
13. இணையம் / வலைப்பூக்கள் / சமூக ஊடகங்கள் (1 x 4 = 4 புள்ளிகள்)

(குறித்த 4 விடயங்களை சுருக்கமாக விளக்கி எழுதியிருப்பின் மாத்திரமே முழுப் புள்ளிகள் வழங்கவும்)

The National e-Learning Portal for The General Education

**4.** இலங்கை தேசிய பாடசாலையின் நூறாவது ஆண்டு நிறைவுவிழா கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது.

(i) பாடசாலையின் வரலாற்றை எடுத்துக்கூறும் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான திரைப்படமொன்று எவ்வாறு அழைக்கப்படும் ?

விபரணத் திரைப்படம் / ஆவணத் திரைப்படம் (1 புள்ளி)

(ii) குறித்த விழாவில் மேற்படி திரைப்படத்தை திரையிட அவசியம் பயன்படுத்த வேண்டிய ஊடக உபகரண வகைகள் இரண்டினைப் பெயரிடுக.

திரைப்பட எறிவை உபகரணம் - Film Projector
பல்லூடக எறிவை உபகரணம் - Multi media Projector
மேசைக் கணினி - Desktop Computer
மடிக் கணினி - Lap Top Computer
தொலைக்காட்சி - Television
இணைப்பு உபகரணம்

(1 x 2 = 2 புள்ளிகள்)

(iii) பாடசாலைக்காக புதிய மின்னஞ்சல் முகவரி ஒன்று உருவாக்கப்பட்டது. மின்னஞ்சலின் மூன்று பயன்களைச் சுருக்கமாக விளக்குக.

1. மிகத் துரிதமாக தகவல்களை அனுப்பவும், பெறவும் முடியும்.
2. பல முகவரிகளுக்கு, பல நபர்களுக்கு ஒரே தடவையில் தகவல்களை அனுப்புதல்.
3. பல வடிவங்களினால் ஆன தகவல்களையும் மின்னஞ்சலில் அனுப்ப முடியும். (ஒலி, ஒளி, ஒலி – ஒளி, அச்சு வடிவங்களை அனுப்புதல்)
4. அந்தரங்கத் தகவல்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.
5. பெறுநர் மின்னஞ்சலை வாசிக்கும் வரை மின்னஞ்சல் அவரது முகவரியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும்.
6. ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைவானது.
7. அனுப்பும், பெறும் மின்னஞ்சல்கள் தொடர்ச்சியாக தனித்தனியாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் வாய்ப்பு.

(1 x 3 = 3 புள்ளிகள்)

(மேற்படி பயன்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் முழுப் புள்ளிகள் வழங்கவும்.)

(iv) மேற்குறித்த நிகழ்வு சம்பந்தமான செய்திக்கு, நான்கு முக்கிய விடயங்களைக் கொண்டதான 'தலைப்பு' (lead) ஒன்றை எழுதி, அந்த முக்கிய விடயங்களைத் தெளிவாக அடிக்கோடிட்டுக் காட்டுக.

யார்? - Who
என்ன? - What
எப்போது? - When
எங்கே? - Where
எவ்வாறு - How
ஏன் - Why

(1 x 4 = 4 புள்ளிகள்)

(மேலுள்ளவற்றில் நான்கு முக்கிய விடயங்கள் விளக்கப்பட்டிருந்தால் புள்ளிகள் வழங்கவும்)

5. (i) இலங்கையிலுள்ள செய்திப் பத்திரிகைகளில் பல ஒழுக்கநெறிக் கோவைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்றைப் பெயரிடுக.

- இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் ஒழுக்க நெறிக் கோவை
- இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்க நெறிக் கோவை
- இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்க நெறிக் கோவை
- சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளன ஒழுக்க நெறிக் கோவை
- சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் ஒழுக்க நெறிக் கோவை

(ஏதாவது ஒன்றை குறிப்பிட்டிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

(1 புள்ளி)

(ii) அச்சு ஊடகத்தில் துண்டுப் பிரசுரங்களின் பயன்பாடு, ஒரு விசேட வகைத் தொடர்பாடலாகும். இவை மிகப் பொருத்தமாகப் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.

1. மக்களிடம் நேரடியாக தகவல்களை வழங்குவதற்கு பயன்படலாம். (கூட்டங்கள், திறப்பு விழாக்கள், பொது விழாக்கள் போன்றன)
2. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வழங்கப்படலாம். (ஏல விற்பனை, மலிவு விற்பனை)
3. இலக்கு வைக்கப்பட்ட குழுவினருக்கு விநியோகிக்கப்படலாம். (தனியார் கல்வி நிலையங்கள், விசேட வகுப்புக்கள், காப்புறுதி போன்றன.)
4. பொது இடங்களில் விரும்புவோர் தாமாகவே பெற்றுக் கொள்ளும் வகையில் வைக்கப்படலாம். (பல்பொருள் அங்காடிகள், வங்கிகள் போன்றன.)
5. ஒப்பீட்டளவில் அதிக பெறுநர்கள் காணப்படும் இடங்களில் விநியோகிக்கப்படலாம்.

(துண்டுப்பிரசுரங்கள் வழங்கும் இடங்கள் மட்டும் உதாரணங்களாக குறிப்பிட்டிருந்தால் அரைப்புள்ளிகள் மாத்திரம் வழங்குக.)

($1 \times 2 = 2$ புள்ளிகள்)

(iii) செய்திப் பத்திரிகைகளுக்கு செய்திகளை அறிக்கையிட 'தலைகீழ் பிரமிட்' முறை பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகை அறிக்கையிடலின் மூன்று அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

1. முக்கியமான விடயத்தில் இருந்து ஆரம்பித்து முக்கியம் குறைந்த விடயத்தின் அடிப்படையில் செய்திகளை முன்வைக்கலாம்.
2. வரிசைக் கிரமமாக செய்திகளை முன்வைக்க முடியும்.
3. செய்தி அடிப்படையில் வேறு முக்கியத்துவம் மிக்க செய்தி கிடைக்கப்பெறும் போது குறித்த செய்தியின் முக்கியத்துவம் குறைந்த இடங்களை நீக்கி விட்டு முக்கிய செய்தியினை சேர்த்துக் கொள்ளலாம்.
4. செய்தியின் முதல் பந்தியில் இருந்து முக்கிய தகவல்களை கிரகித்துக் கொள்ள முடியும்.
5. குறித்த செய்தி பற்றிய வெவ்வேறு விபரங்கள் வெவ்வேறு பந்திகளின் கீழ் தரப்படலாம்.

($1 \times 3 = 3$ புள்ளிகள்)

(மேலுள்ள அனுகூலங்களில் ஏதாவது மூன்று சுருக்கமாக விளக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்படலாம்.)

(iv) வானொலி, வலுவான ஓர் ஊடக வடிவமாகும். ஆனால், அது தனக்கேயான பலவீனங்களையும் கொண்டிருக்கின்றது. அவற்றுள் நான்கினை விவரிக்குக.

1. ஒலி வடிவத்தை மாத்திரம் கொண்ட ஊடகம்

2. ஒரு தடவை மாத்திரமே செவிமடுக்க முடிதல்.

3. செவிமடுப்பவரின் கவனம் இலகுவில் திசை திருப்பக் கூடிய நிலை அதிகம்.

4. சிக்கலான கருத்துக்கள் முன்வைக்கப்படுவது கடினம்.

5. பெரும் இலக்கங்களிலான எண்ணிக்கைகள் குறிப்பிடப்படுதல் கடினமானது.

6. தாமதமான பின்னூட்டம்.

7. செய்தி ஊடகத்தின் உணர்வு நிலை அறிவிப்பாளரினால் கையாளளுக்கு உட்படுத்தப்படலாம்.

8. செவிப்புலச் செய்திகளை காட்சி ரீதியாக காணும் கற்பனையாக்கத் திறன் ஒவ்வொரு நபர்களுக்கும் வித்தியாசப்படுவதால் ஒவ்வொருவருவராலும் புரிந்து கொள்ளப்படும் அர்த்தங்கள் வேறுபடும்.

(பலவீனங்கள் குறிப்பிடப்பட்டிருத்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.)

(1 x 4 = 4 புள்ளிகள்)

6. ரவி, பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றபோது அவனது பேச்சாற்றலைப் பற்றிய பெருமையைப் பலரும் கேள்விப்பட்டனர்.

(i) ஒரு பேச்சாளர் செவிமடுப்பாளர்களை சுற்றிவரத் தொடர்ந்து பார்த்தவாறே பேசுவார். இந்த நுட்பம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

கலங்கரை விளக்க நுட்பமுறை (1 புள்ளி)

(ii) போட்டியில் ரவிக்கு அவசியம் உதவியாக இருந்திருக்கக்கூடிய நான்கு வாய்மொழியற்ற அம்சங்களைப் பெயரிடுக.

1. முகத்தோற்றம்
2. விழிவழித் தொடர்பு
3. உடல் அசைவுகள்
4. பேச்சாளரின் தோற்றம்
5. உடல் வெளிப்பாடும் / உடல் நிலையும்
6. மொழித் துணை அம்சங்கள் (குரலின் தொனி, ரிதம், உச்சம்)
7. பேச்சாளரால் பயன்படுத்தக்கூடிய குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகள்
8. வெளியைப் பயன்படுத்தும் விதம்
9. ஆடை, அணிகலன்கள்

(1/2 x 4 = 2 புள்ளிகள்)

**(iii) ரவியின் வெற்றி பற்றிய தகவல் செய்திப் பத்திரிகைகளில் வெளியானது. செய்திப் பத்திரிகைகளின் மூன்று வெவ்வேறான ஊடக உள்ளடக்க வகைகளைச் சுருக்கமாக விளக்குக.**

1. செய்தி
2. ஆசிரியர் தலையங்கம்
3. சிறப்புக் கட்டுரைகள்
4. கேலிச் சித்திரங்கள்
5. விடயக் கட்டுரைகள்
6. புகைப்படக் கட்டுரைகள்
7. விளம்பரங்கள் (1 x 3 = 3 புள்ளிகள்)

( ஏதாவது 3 வகை பற்றிய பண்புகளும் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

**(iv) ரவி பேச்சுப்போட்டிக்குத் தயாராவதற்காக, பெரும்பாலும் தகவல்களைப் புதிய ஊடகத்திலிருந்து பெற்றுக் கொண்டான். புதிய ஊடகத்தின் இயல்பை நான்கு அம்சங்களைப் பயன்படுத்தி விளக்குக.**

1. பூகோளமய வரையறை இல்லாமை
2. பெறுநரின் விருப்பத்துக்கு ஏற்ப செய்திகளை தெரிவு செய்திட இயலுமாதல்.
3. கணினி, கைத்தொலைபேசி போன்ற பல்லூடகக் கருவிகளின் துணையோடு பயன்பெற வாய்ப்புக் கிட்டுதல்.
4. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு இடத்திலும் இருந்து பயன்படுத்த முடியுமாயிருத்தல்.
5. பூகோள ரீதியாக தகவல் பரவுதல் நிகழக்கூடியமை.
6. தொடர்புபடும் சகலருக்கும் இடைவினையாகத் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கும் மற்றும் செம்மையாக்கம் செய்வதற்கும் உள்ள ஆற்றல்.
7. ஒப்பீட்டு ரீதியில் தனியாட்களாக ஊடக நுகர்வுக்குரிய அதிக வாய்ப்புக்களைத் தருவது.
8. பல்வித பயன்பாடுகளுக்கும் பயன்தருவது (விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றன.)
9. கண்களுக்குப் புலப்படாத உரிமையாண்மை.
10. பயன்படுத்துவோருக்கு தோழமையான / அனுசரணையான ஊடகம் ( User Friendly )

(எவையேனும் நான்கு அம்சங்களை பயன்படுத்தி விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

(1 x 4 = 4 புள்ளிகள்)

**7.** தொடர்பாடுபவர் → செய்தி → ஊடகம் → பெறுநர் → X

(i) மேற்குறித்த வரிப்படம் ஹரோல்ட் லாஸ்வெல்லின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்குமானால், இறுதியிலுள்ள X ஐப் பெயரிடுக.

தாக்கம் ( Effect ) (1 புள்ளி)

(ii) தொடர்பாடலின் செயற்பாடுகள் X உடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன. தொடர்பாடலின் நான்கு முக்கியமான செயற்பாடுகளும் யாவை ?

தகவல் அளித்தல்
கல்வியூட்டுதல் / அறிவூட்டுதல்
பொழுதுபோக்கு / மகிழ்வூட்டுதல்
தூண்டலை ஏற்படுத்தும் / கிளர்வூட்டல் (1/2 x 4 = 2 புள்ளிகள்)

(iii) பாடசாலை வகுப்பறையில் இடம்பெறுவதும் ஒரு தொடர்பாடல் நடவடிக்கையே ஆகும். பாடசாலை வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய எறிவையற்ற வகுப்பறை ஊடக உபகரணங்கள் மூன்று பயன்படுத்தப்படும் முறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

கரும்பலகை, வெண்பலகை, பச்சைப்பலகை,
காந்தப்பலகை,
அறிவித்தல் பலகை / செய்திப் பலகை,
பக்கப்புரட்டி (1 x 3 = 3 புள்ளிகள்)

(மேலுள்ள உபகரணங்களில் ஏதாவது மூன்று சுருக்கமாக விளக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்படலாம்.)

The National e-learning Portal for The General Education

(iv) மேற்குறித்த வரிப்படத்தின் மூலம் எடுத்துக்கூறப்பட்ட தொடர்பாடல் செயன்முறை, வெகுசன ஊடகங்களிலும் நடைபெறுகிறது. வெகுசன ஊடகங்களின் நான்கு முக்கிய இயல்புகளை விவரிக்குக.

1. பரந்த மக்களை பெறுநர்களாகக் கொண்டது.
2. நன்கு திட்டமிடப்பட்ட நிறுவனப்படுத்தப்பட்ட முறைமை
3. தொடர்பியலாளர்கள் தொழில்சார் தகைமை கொண்டவர்கள்.
4. அடிப்படையில் ஒருவழித் தொடர்பாடல்.
5. பின்னூட்டல் தாமதமானது அல்லது கிடைக்கப்பெறாதது
6. பல வழிகளிலும் வாயிற்காப்பாளர்கள் காணப்படுவார்கள்.
7. தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்படல் அவசியம்.
8. தொடர்பாளனுக்கும் பெறுநருக்கும் இடையில் உள்ள தூரம் அதிகம்.
9. செய்தி பொதுவானதாயிருத்தல்.
10. குழுச் செயற்பாடாக அமைதல்.
11. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது.
12. வணிக, ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டது. (1 x 4 = 4 புள்ளிகள்)

(மேலுள்ள விடயங்களில் ஏதாவது நான்கு விபரித்திருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்படலாம்.)